**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 14/2020</u>**
**<u>நாள் 05/03/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 5–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – மல்லிகா | த/பெயர் – சுப்பிரமணி |
| வயது – 70 | தொழில் – |
| விலாசம் – எண் 7, மயிலாமந்த கோயில் தெரு, எஸ்.ஆர் பாளையம், வல்லூர், பொன்னேரி | |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் பள்ளிபுரத்தில் வசிக்கிறேன். எனக்கு திருமணம் ஆகி சுமார் 50 வருடங்கள் இருக்கும். எனது தந்தை பெயர் பாலப்பரெட்டி, எனது தாயார் பெயர் சுசிலா ஆகும். எனது பெற்றோருக்கு என்னுடன் சேர்ந்து மொத்தம் 4 பிள்ளைகள் பிறந்தோம் இதில் 2 ஆண்வாரீசு, 2 பெண்வாரீசு., எனது சின்ன தம்பியின் மகன் அசோக் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளான். எனது சின்ன தம்பியும் அவரது மனைவியும் காலமாகிவிட்டனர். அவர்களின் ஒரே வாரீசான வாதி அசோக் பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு சொத்தை பொருத்து அ அட்டவனை பி அட்டவனை என்று குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி அப்பாவு எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. இதுவரை குடும்ப சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்பதால் எனது தம்பியின் மகன் அசோக் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் எனது பாகத்தினை எனது தம்பி செங்கனின் மகன் 3 ம் பிரதிவாதியான ஆனந்த் பாபுக்கு எனது

பாகத்தை கொடுப்பதில் எந்த ஆட்சேபனை இல்லை என்பதற்காக சாட்சியம் அளிக்கிறேன். இதற்கு நான் எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பார்க்கவில்லை. 2016 ல் குடும்ப சொத்துக்களில் ஒரு சொத்து கிரையம் செய்யப்பட்டது. அந்த கிரையம் செய்யப்பட்ட பணத்தில் வாதிக்கும் கொடுக்கப்பட்டது ஆனால் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்று தெரியாது. அவ்வாறு தொகை எதுவும் கொடுக்கவில்லை நான் கூறுவது தவறு என்றும் தம்பியின் மகனுக்கு பௌவ்வியபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**